ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2026 மாச்சு 25 |

*நாணயக் கொள்கை மீளாய்வு: இல. 02 – 2026 மாச்சு*

# இலங்கை மத்திய வங்கி ஓரிரவு கொள்கை வீதத்தினை மாற்றமின்றிப் பேணுகின்றது

நாணயக் கொள்கைச் சபையானது நேற்று இடம்பெற்ற அதன் கூட்டத்தில், ஓரிரவு கொள்கை வீதத்தினை 7.75 சதவீதம் கொண்ட அதன் தற்போதைய மட்டத்தில் பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது. தற்போது இடம்பெற்றுவரும் மத்திய கிழக்கு மோதல்களிலிருந்து தோற்றம்பெறுகின்ற நிச்சயமற்றதன்மைகளுக்கு குறிப்பான கவனம்செலுத்தி, உள்நாட்டு மற்றும் உலகளாவிய பக்கங்கள் மீது பரிணமிக்கின்ற அபிவிருத்திகளையும் தோற்றப்பாட்டையும் கவனமாகப் பரிசீலனையிற்கொண்டதன் பின்னர் சபை இத்தீர்மானத்தினை மேற்கொண்டது.

புவிசார் அரசியல் பதற்றங்களின் தீவிரமடைதலின் காரணமாக ஏற்பட்டுள்ள உயர்வடைந்த நிச்சயமற்றதன்மைக்கு மத்தியில் உலகளாவிய வலு விலைகளின் சடுதியான அதிகரிப்பு மற்றும் வர்த்தக இடையூறுகள் என்பன உள்நாட்டு வலு விலைகளில் குறிப்பிடத்தக்க மேல்நோக்கிய சீராக்கமொன்றினைத் தேவைப்படுத்தின. 5 சதவீதம் கொண்ட இலக்குடன் ஒப்பிடுகையில் 2026 பெப்புருவரியில் 1.6 சதவீதமாகக் (ஆண்டிற்காண்டு) காணப்படுகின்ற தற்போதைய குறைந்த மட்டத்திலான பணவீக்கமானது உயர்ந்தளவிலான வலு விலைகள் மற்றும் பணவீக்கத்தின் மீதான அவற்றின் கசிவுத் தாக்கங்களுக்கு இடமளிப்பதற்கு போதியளவிலான இடைவெளியினை வழங்குகின்றது. அண்மையில் கிடைப்பனவாகவுள்ள தரவுகள் மற்றும் நிலவுகின்ற நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு, பணவீக்கமானது முன்னர் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க முன்னதாக 2026இன் இரண்டாம் காலாண்டில் 5 சதவீதம் கொண்ட இலக்கினை எட்டுமென தற்போது எதிர்பார்க்கப்படுகின்றது. பணவீக்கமானது அதன்பின்னர் இலக்கினை அண்மித்துக் காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆண்டின் இறுதியில் டித்வா புயலினால் ஏற்பட்ட இடையூறுகளிற்கு மத்தியிலும் பொருளாதாரமானது 2025இல் 5.0 சதவீதம் கொண்ட வலுவான உண்மை வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. முன்னணிப் பொருளாதாரக் குறிகாட்டிகள் 2026இன் முற்பகுதியில் புயலிற்குப் பின்னரான வலுவான மீட்சியொன்றினை எடுத்துக்காட்டுகின்றன. இருப்பினும், தற்போது நிலவுகின்ற மோதல் நீடிக்கும் பட்சத்தில், அதிலிருந்தான கசிவுத் தாக்கங்கள் எதிர்வருகின்ற காலப்பகுதியில் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும்.

உயர்ந்தளவிலான பணவனுப்பல்கள் மற்றும் சுற்றுலாத்துறை வருவாய்கள் என்பவற்றுடன் இணைந்து, இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் வலுவான ஏற்றுமதி வருவாய்களினால் ஆதரவளிக்கப்பட்டு வெளிநாட்டுத் துறையானது 2026இன் முதல் இரண்டு மாதங்களில் தொடர்ந்து வலுவடைந்து காணப்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2026 பெப்புருவரி இறுதியில் ஐ.அ.டொலர் 7.3 பில்லியன்[1] தொகைக்கு அதிகரித்ததுடன் மத்திய வங்கியானது ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில்

[1] இது சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கின்றது.

சந்தையிலிருந்து கணிசமானளவிலான வெளிநாட்டுச் செலாவணியினைக் கொள்வனவு செய்தது. இருப்பினும், மத்திய கிழக்கில் நிலவுகின்ற மோதலானது இலங்கையின் வெளிநாட்டுத் துறைத் தோற்றப்பாட்டிற்குக் குறிப்பாக, வலு, சுற்றுலாத்துறை, வர்த்தகம் மற்றும் பணவனுப்பல்சார் பாய்ச்சல்கள் என்பன ஊடாக இடர்நேர்வுகளினைத் தோற்றுவிக்கின்ற போதிலும் தாக்கத்தின் ஒட்டுமொத்த அளவானது நிச்சயமற்றதாகவே தொடர்ந்தும் காணப்படுகின்றது. இலங்கை ரூபாவானது 2026இன் முற்பகுதியில் ஒப்பீட்டளவில் உறுதியாகத் தொடர்ந்தும் காணப்பட்ட வேளையில், மத்திய கிழக்கு மோதலின் ஆரம்பத்தினைத் தொடர்ந்து பிராந்திய நாடுகளின் செலாவணி வீதங்களினைப் போன்று சில பெறுமதித்தேய்மான அழுத்தங்கள் அவதானிக்கப்பட்டன.

பணவீக்கம் இலக்கை அண்மித்து நிலையுறுதியடைவதை நிச்சயப்படுத்துவதற்குப் பொருத்தமான கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துகின்ற அதேவேளை, பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த ஆற்றலை எய்துவதனை ஆதரவளிப்பதற்குச் சபை தொடர்ந்தும் தயாராகவுள்ளது.

நாணயக் கொள்கை மீளாய்வு பற்றிய அடுத்த கிரமமான அறிக்கை வெளியீடு 2026 மே 26ஆம் நாளன்று நடைபெறும்.

**இணைப்பு 01:**

*கீழே எடுத்துரைக்கப்பட்டுள்ள எறிவுகள் 2026 மாச்சு 24அன்று கிடைக்கப்பெறத்தக்க தகவல்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். மத்திய கிழக்கில் நிலவும் நெருக்கடியின் நிலையற்ற தன்மை அத்துடன் உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கை ஆகிய இரண்டிலும் அதன் பரந்த வீச்சிலான கசிவுத்தாக்கங்கள் போன்றவற்றுக்கு மத்தியில், தற்போதைய பணவீக்கத் தோற்றப்பாடு அதிகரித்த நிச்சயமற்றத்தன்மைக்குட்பட்டதாக காணப்படுகின்றது. இதற்கமைவாக, அடிப்படையான நிலைமைகளில் எவையேனும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இந்த எறிவுகளிலிருந்தான குறிப்பிடத்தக்க விலகல்களுக்கு வழிவகுக்கக்கூடும்.*

**முதன்மைப் பணவீக்க எறிவுகள்* (காலாண்டு, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், ஆண்டிற்காண்டு)**
2026 மாச்சு மாத நாணயக் கொள்கைச் சுற்றுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எறிவுகளின் அடிப்படையிலமைந்துள்ளது




*மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்*

***மத்திய வங்கிக்கும் நிதி அமைச்சரிற்கும் இடையில் 2023 ஒத்தோபரில் கைச்சாத்திடப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையின் கீழ் பணவீக்க இலக்கானது (5%) இணங்கிக்கொள்ளப்பட்டது.*

* வீச்சு வரைபடத்திலுள்ள அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன. எறிவுகள் 2026 மாச்சு மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைப்பனவாகவிருந்த சகல தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன.

குறிப்பு: வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப் பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையினைத் தெளிவுபடுத்துகின்றது. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நம்பிக்கை இடைவெளிகள் நடுத்தர காலத்தில் பணவீக்கம் தளம்பலடையக்கூடிய பெறுமதிகளுக்குள்ளான வீச்சுகளை எடுத்துக்காட்டுகின்றன. உதாரணமாக, தடிப்பான பச்சை நிறப்படுத்தப்பட்ட பகுதியானது 50 சதவீத நம்பிக்கை இடைவெளியினைப் பிரதிபலித்து, உண்மையான பணவீக்க விளைவு இவ்விடைவெளியினுள் அமையப்பெறுவதற்கான 50 சதவீத நிகழ்தகவினை எடுத்துக்காட்டுகின்றது. நம்பிக்கை இடைவெளிகள் நீண்ட காலத்தில் பணவீக்க எதிர்வுகூறலின் அதிகரிக்கின்ற நிச்சயமின்மையினைக் காட்டுகின்றன.

***குறிப்பு:* எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல.**

2026 மார்ச் மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைப்பனவாக இருந்த தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை எறிவுகள் பிரதிபலிக்கின்றன. அவை உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகள் பற்றிய எதிர்வுகூறல்கள், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சிப் பாதை, அரசாங்கத்தின் எதிர்பார்க்கப்படும் இறைப் பாதை, வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மீதி உள்ளடங்கலாக வெளிநாட்டுத்துறையின் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகள் மற்றும் பெடரல் நிதியங்கள் வீதத்தினால் குறித்துரைக்கப்பட்ட உலகளாவிய நிதியியல் நிலைமைகள் ஆகிய நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றன. மேலும், எறிவுகள் மாதிரியுருவிற்கு ஒத்திசைவான வட்டி வீதப் பாதை மற்றும் அதன்மூலம்

விளைகின்ற பேரண்டப்பொருளாதாரப் பதிலிறுப்புக்கள் என்பன மீதான நிபந்தனைகளுக்குட்பட்டவையாகும். இவ்வூகங்களில் ஏற்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து அடையப்பட்ட பணவீக்கப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும்.

உள்நாட்டு வலு மற்றும் போக்குவரத்துச் செலவுகள் மற்றும் வளமாக்கிகளின் விலைகள் போன்றவற்றில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க உயர்ந்தளவான அதிகரிப்புக்கள் போன்றவற்றுக்கு சாத்தியமாக வழிவகுக்கும் உலகளாவிய பண்டச் சந்தைகள், வலு வழங்கல்கள் மற்றும் கப்பற் பாதைகள் போன்றவற்றுக்கு இடையூறினை ஏற்படுத்தக்கூடிய தீவிரமான புவிசார் அரசியல் பதற்றங்கள்; இலங்கை ரூபாவின் உயர்ந்தளவிலான மட்டங்களிலான சாத்தியமான பெறுமதித்தேய்வு; வலுவான கொடுகடன் வளர்ச்சியின் காலங்கடந்த தாக்கத்தினால் உந்தப்பட்ட எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க உயர்ந்தளவிலான கேள்வி அழுத்தங்கள்; வேளாண்மை மற்றும் வலுத் துறைகளைப் பாதிக்கின்ற சாத்தியமான மீண்டும் மீண்டும் ஏற்படும் பாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் அதன்மூலம் உணவு மற்றும் வலுப் பணவீக்கத்தின் மீதான மேல்நோக்கிய அழுத்தம் போன்ற காரணிகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற பணவீக்க எறிவுகளின் அடைவிற்கு மேல்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. அதேவேளை, கேள்வி நிலைமைகளின் சாத்தியப்பாடு எதிர்பார்க்கப்பட்டதை விடவும் நலிவடைந்திருப்பதால் மையப் பணவீக்கத்தில் படிப்படியான மீட்சிக்கு வழிவகுத்தமை, மேம்பட்ட வேளாண்மை உற்பத்தியின் ஏதேனும் சாத்தியப்பாடு உணவு விலைகள் மீதான அழுத்தங்களைத் தளர்த்துவதற்கு உதவியமை போன்றவற்றை பணவீக்க எறிவுகளின் அடைவிற்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் உள்ளடக்கின்றன.

தரவு இணைப்புப் பெறுவழி: https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/mpr02_2026_t.pdf